அன்புள்ள தோழனுக்கு உன்தோழி எழுதுவது 2
நலம் கேட்க வார்த்தை இல்லை உன்கனவு முடியவில்லை
உன்கனவை தொடர்ந்து வரும் எம் கனவும் முடியவில்லை
கண்ணில் காணும் கனவுகள் தான் காலை பொழுதில் கலைந்துவிடும்
நெஞ்சில் நீண்ட கனவு கண்டோம் நாளை விடிந்தும் தொடர்ந்து வரும்
தோழா என் தோழா இது நம்பிக்கை என்னும் வெளிச்சம் தரும்

அன்புள்ள தோழனுக்கு உன்தோழி எழுதுவது

பூவாய் குருவி கிளைமேல் ஆடிய நிலத்தை தொலைந்து நாம் நடந்தோம்
பூர்வான் தாக்குதல் பனைமேல் எழுப்பிய புகையில் கரைந்து நாம் அழுதோம்
பள்ளிக்குழந்தைகள் துள்ளி வந்தது பிணமாய் விதியில் எரிந்திடவா
ஜயோ நம் இளம் பெண்களின் வாழ்வது பகைவன் கையில் சிதைந்திடவா
எத்தனை எத்தனை உயிர்களடா எல்லாம் நாளைய பயிர்களடா
நம் இனத்தைகாக்கும் தளிர்களடா

அன்புள்ள தோழனுக்கு உன்தோழி எழுதுவது

புதிதாய் பிறந்து புதிதாய் வளர்ந்தது புதிதாய் எழுந்து நாம் நடப்போம்
இனிதாய் நாளைய சந்ததி வாழ இன்றே நாம் ஒரு முடி வெடுப்போம்
மண்ணும் நம் மண் மரமும் நம் மரம் மாற்றான் கையில் தொலைந்தடா
தாயொரு தேசம் தந்தையொரு தேசம் தமிழினம் அலைந்து திரியுதடா
நாளை வாழ்கை நலமாகும் நம்பிக்கை நெஞ்சில் உரமாகும்
இந்த காயமும் மறுநாள் குணமாகும்

அன்புள்ள தோழனுக்கு உன்தோழி எழுதுவது